[1st April 1963

(b) Out of the staff referred to in item (ii) above, the staff paid from contingencies are allowed only fixed pay and they are given the increase in Dearness allowance of Rs. 5 sanctioned in July 1962. Other regular staff are in receipt of prescribed pay and Dearness allowance.

(அ) மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் கீழ்ப் பின் வரும் பணியாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் :—

(1) கெஜெட் பதிவு பெற்றவர் 37 (ஐந்து பதவிகள் நிரப்பப் படவில்லை).

(2) கெஜெட் பதிவு பெறாதவர்கள் (தொழிற்றுறையைச் சார்ந்தவர், சாராதவர்) 10,701 (முப்பது பதவிகள் நிரப்பப்பட வில்லை).

(ஆ) (2) இனத்தில் குறிப்பிட்ட பணியாளர்களில் சில்லறைச் செலவு நிதியிலிருந்து சம்பளம் பெறும் பணியாளர் களுக்கு நிலையான சம்பளம் மட்டுமே கொடுக்கப்படுகிறது. 1962 ஜூலையில் அனுமதித்த ரூ. 5 அகவிலைப்படி உயர்வும் கொடுக்கப் படுகிறது. முறையாக அமர்த்தப்பட்ட இதர பணியாளர்கள் நிர்ணய சம்பளத்தையும் அகவிலைப் படியையும் பெற்று வருகின் றனர்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்தப் பதவிகள் நிரப்பப்படாததற்குக் காரணமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆட்கள் வராததுதான் காரணம். போஸ்ட் அட்வர்டைஸ் பண்ணியும் ஒருவரும் மனு செய்யவில்லை.

திரு. கோ. சி. மணி : அந்த பதவிகளுக்கு ஒருவரும் வரவில்லை என்பதற்குக் காரணமென்ன என்பதை அரசாங்கம் தீர ஆராய்ந் திருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதை அரசாங்கம் ஆராயவில்லை. கனம் அங்கத்தினர் அவர்களிடம் யாராவது 'ரெப்ரசென்ட்' பண்ணியிருந்தால் அதைப்பற்றிச் சொன்னால் நன்றாக இருக்கும்.

அரசாங்க மருத்துவ மனை (கரம்பக்குடி)

* 448 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்தில் உள்ள அரசாங்க மருத்துவ விடுதியில் பிரசவ விடுதி ஏற்படுத்துவது சம்பந்தமாக மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலம் விண்ணப்பம் வந்ததா ?

(இ) அப்படியானால் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) எழாது.

1st April 1963]

திரு. பி. முருகையன் : மாவட்ட வளர்ச்சி மன்றம் மூலமாக டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்விஸுக்கு ஒரு தீர்மானம் அனுப்பி அது இப்போது அழுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு தகவல் கிடைத்துள்ளது. அது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து போர்டு, காம்பக்குடியிலிருந்து ஒரு ரெப்ரெஸென்டேஷன் வந்தது. அவர்களே எடுத்து நடத்தி, கட்டடத்தைக் கட்டி, அதற்கு 48,000 ரூபாய் ஆகுமென்றும், அதற்கு மேல் மெயின்டினென்ஸ் எக்ஸ்பென்ஸை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். அதைப்பற்றி டி.எம்.எஸ். எழுதிக் கேட்டிருக்கிறார். இப்போது அதைப் பற்றிய தகவல் ஏதும் பஞ்சாயத்து போர்டிலிருந்து வரவில்லை.

குடிதண்ணீர் திட்டம் (திண்டிவனம்)

*** 452 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோடைக்கால பற்றுக்குறையை தவிர்ப்பதற்காக திண்டிவனம் நகர குடிதண்ணீர் திட்டத்துடன் ரெட்டணையிலுள்ள ரெட்டியார் கிணற்றை இணைக்கும் நடவடிக்கை எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரெட்டியார் கிணற்றிலும், மற்ற கிணறுகளிலும் வரும் கோடைக் காலத்தில் நீர்வளம் சம்பந்தமாகச் சோதனைகள் நடத்தும்படி சுகாதார இன்ஜினீயரைக் கேட்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. தங்கவேலு : இந்தத் திட்டம் எடுத்துக்கொள்வதற்குக் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதிலே இப்போது இன்வெஸ்டிகேஷன் செய்வதற்காக வேண்டி ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். இன்வெஸ்ட்டிகேஷன் ரிப்போர்ட் வந்த பிறகுதான் இதைக் கால தாமதம் இல்லாமல் எடுத்துக் கொள்ள முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

வானூர் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனை

*** 454 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனையில் டாக்டர் இல்லாமல் சுமார் ஓராண்டு காலமாக அந்த வட்டாரத்து மக்கள் சிகிச்சைக்கு அவதிப்படுவது உண்மையா?